[2002 ஏப்ரல் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 219, திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

219—

படுக்கை வசதிகள்

***9326—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகர பொது மருத்துவமனையில் நோயாளிகள் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிதம்பரம் அரசினர் காமராஜர் மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

முற்பகல் 10-30

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அரசு பொது மருத்துவமனை, சிதம்பரம் தாலுகா தலைமை மருத்துவமனையாகும். சிதம்பரம் தாலுகாவிற்கு உட்பட்ட, சிதம்பரம் நகரம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், புவனகிரி ஒன்றியம், கீரப்பாளையம் ஒன்றியம் மற்றும் குமராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 300 கிராம மக்களுக்கு மேலுள்ள ஏழை எளிய மக்கள் இந்த மருத்துவமனையில் வந்து தங்களது நோய்களைத் தீர்த்துக்கொள்கிறார்கள். தினமும் சுமார் 1,000 முதல் 1,200 புற நோயாளிகள் வந்து இங்கே சிகிச்சை எடுத்துக்கொள்கிறார்கள். தினமும் சுமார் 100 முதல் 125 உள் நோயாளிகள் இங்கே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் அங்கு ஆண்களுக்கென்று Medical Ward 16 படுக்கைகளும், Surgical Ward 16 படுக்கைகளும் மற்றும் பெண்களுக்கென்று Medical plus Surgical Ward 16 படுக்கைகளும், Labour Ward 16 படுக்கைகளும் மற்றும் Special Cases என்பதற்காக இதர வகைகளுக்காக 72 படுக்கைகளும், மொத்தம் 131 படுக்கைகள் கொண்டதாக உள்ளது. ஆனால், இதில் தினம் 100 முதல் 125 உள் நோயாளிகள் இருக்கவேண்டிய சூழ்நிலையில் இந்த Medical and Surgical

2002 ஏப்ரல் 24]

Ward-லே அதிகம் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே அந்தச் சூழ்நிலையில் அந்த நோயாளிகளெல்லாம் தரையிலே படுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தப் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் ஒரு மிகப் பெரிய நகரம். 3 1/2 இலட்சம் மக்கள் தொகைக்கு மேல் அங்கே இருக்கிறார்கள். தற்போது அரசினர் காமராஜர் மருத்துவமனைக்கு 131 படுக்கைகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உள்நோயாளிகளின் எண்ணிக்கை 150-க்கு மேல் வருகிறது. உள்ளபடியே அரசும் அந்தப் படுக்கை எண்ணிக்கையை உயர்த்துவதற்குத்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் உலக வங்கி நிதி உதவியுடன் கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டத்தின்கீழ் 16 படுக்கைகளுடன், அறுவை அரங்குடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்தோடு* Homoeopathy *மருத்துவப் பிரிவை ஏற்படுத்துவதற்கு 1998-லே அரசாணை பிறப்பிக்கப்பட்டும் அந்தப் பிரிவு இன்னும் தொடங்கப்படாத நிலைமை இருக்கிறது. அந்தப் பிரிவையும் தொடங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இப்பொழுது நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு, மருத்துவர்கள் பணியிடங்கள் அனைத்தும் அங்கே நிரப்பப்பட்டுவிட்டன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் நிதி நிலைமை சீரடைந்தவுடன் தேவைக்கேற்ப படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 220, திரு. இ. புகழேந்தி (குறுக்கீடு) திரு. சரவணன்.*

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, அங்குள்ள அனைத்து மருத்துவப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். ஆனால் தற்போது அங்கு குழந்தை நல மருத்துவரும், Anaesthesia மயக்கநிலை மருத்துவரும் தற்போது அங்கு பணியில் சேரவில்லை என்பதைத் தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு அவசர சிகிச்சைக்காகத் தனிப்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

பிரிவு கட்டடம் கிடையாது. அதைப்போல மகப்பேறு பிரிவிற்கென்று தனிப் பிரிவு கட்டடம் கிடையாது. ஆகவே அதையும் தாங்கள் கவனத்தில் கொண்டு வரும் நிதியாண்டில் அதற்கு நிதி ஒதுக்கி அந்தக் கட்டடங்களைக் கட்டித்தர ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட டாக்டர்கள் பணியிடம் மொத்தம் 11. அந்த 11 இடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 2 இடங்களுக்கு, அதாவது மயக்க மருந்து நிபுணர் பணியிடத்திற்கும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு பணியிடத்திற்கும் Assistant Surgeon-Surgery தகுதியோடு 2 பணியிடங்களையும் நிரப்பிவிட்டார்கள். அங்கே மயக்க மருந்து நிபுணர் ஒருவரும், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, அந்த 2 பணியிடங்களும் விரைவிலே நிரப்பப்படும். தற்போது அங்கே பணிகள் எதுவும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலே மயக்க மருந்து நிபுணர் மாற்றுப் பணியிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறார்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 220, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

220—

குடிநீர்

***284—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் குடிநீர்ப் பிரச்சினை நீங்கிட ஏற்கெனவே தொடங்கப்பட்ட திட்டம் விரைவில் நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?